DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 10/ 2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 6 |
| Name | : பிரபு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் ஆந்திராவில் முறுக்கு தொழில் செய்கிறேன்., ஆஜர் எதிரியை தெரியும். 25.04.2023 ம் தேதி காலை 10.30 மணிக்கு சமத்துவ புரம் இரு சக்கர வாகன பழுது பார்க்கும் கடை முன்பாக நான், தங்கமாலை, பார்த்திபன், பாரத் , கருப்பு , சாமிராஜ் ஆகியோர்கள் பேசி கொண்டிருந்த போது எதிரி சிலைராஜா, கெட்டவார்த்தைகள் பேசி சாமிராஜை அரிவாளால் வெட்ட வந்தார். என்ன கார ணம் என்றால் பாண்டியம்மாளுக்கும், சிலைராஜாவுக்கும் தவறான உறவு இருந்திருக்கிறது, அதனை சாமிராஜ் கண்டிருத்திருக்கிறார். ஆகையால் எதிரி சாமிராஜை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு கழுத்தை நோக்கி கையில் இருந்த அரிவாளால் வெட்டினார், உட னே சாமிராஜ் கையால் தடுத்த போது இடது கை மணிக்கட்டில் வெட்டு விழுந்தது. 2 வது முறை வெட்ட முயற்சித்த போது தடுத்தால் அதே மணிக்கட்டில் வெட்டு விழுந்தது. 3 வது தடவை வெட்டும் போது சாமிராஜின்

மூக்கு பகுதியில் வெட்டு பலமாக விழுந்தது. எங்களை பார்த்து உங்களையும் விடமாட்டேன் என்று சொல்லி விட்டு அரிவாளுடன் வடக்கு பார்த்து போனார், உடனே அவ்வழியாக வந்த போக்கு ஆட்டோவில் சாமிராஜை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தோம். அங்கிருந்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் தனியார் மருத்துவமனைக மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். போலீஸ் என்னை உசிலம்பட்டி அரசு மருத்துவமனையிலும், மதுரை மீனாட்சி மருத்துவமனையிலும் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

சாமிராஜ் அண்ணனின் மாமனார் ஆவார். சாமிராஜிக்கும், சிலைராஜிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது என்றால் சரிதான். வழக்கு பற்றிய விவரம் போலீஸ் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல. முன்பே தெரியும், வழக்கு சம்பவம் எனக்கு யார் முதலில் சொன்னது என்றால் யாரும் சொல்லவில்லை நான், நேரடியாக பார்த்தேன். சம்பவம் நடந்த நேரம் தெரியுமா என்றால் 10 மணியிலிருந்து 10.30 மணிக்குள் இருக்கும், சம்பவம் நடந்த போது கணேஷ் இரு சக்கர வாகன பழுது பார்க்கும் கடைக்கு முன்பாக நின்று கொண்டிருந்தேன். சம்பவ காலம் கொரோனா காலம் என்றால் சரிதான், சம்ப வ காலத்தில் ஊரடங்கு இருந்தது என்றால் சரிதான். ஊரடங்கு இருந்ததால் நாங்கள் எல்லோரும் கூட முடியாது என்றால் சரிதான், தற்செயலாக கூடினோம். வெட்டுப்பட்டவுடன் சாமிராஜ் மயக்கமாகிவிட்டாரா என்றால் இல்லை, -சுயநினைவுடன தான் இருந்தார், எதிரி வெட்ட பயன்படுத்திய அரிவாள் மரப்பிடியா , இரும்பு பிடியா என்றால் இரும்பு பிடி அரிவாள் ஆகும், சம்பவத்தின்போது சிலைராஜா என்ன உடை அணிந்திருந்தார் என்றால் கைலி, வேட்டி அணிந்திருந்தார். சட்டை அரைக்கையா, முழுச்சட்டையா என்றால் ஞாபகமில்லை. சிலைராஜா வெட்டி விட்டு வடக்கு பார்த்து ஓடினார், உசிலம்படடி மருத்துவமனைக்கு சுமார் 11 மணி இருக்கும். சம்பவ இடத்திற்கு போலீஸார்

வந்தார்களா என்றால் உசிலம்பட்டி மருத்துவமனைக்கு தான் வந்தார்கள். சாமிராஜாவை வெட்டும் போது சத்தம் போட்டாரா என்றால் சத்தம் போட்டார், தடுககவும் செய்தார், சாமிராஜா மனைவிக்கும், சிலை ராஜாவுக்கும் தொடர்பு இருந்தது என்றால் சரிதான். சிலைராஜா ஒர்க்ஷாப்பிற்கு எந்த பக்கத்தில் இருந்து வந்தார் என்றால் திடீரென வந்தார், பயமாகி விட்டது. போலீசார் என்னை உசிலம்பட்டி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார். போலீசார் என்னை விசாரித்த தேதி 25.04.2021 ஆகும், சம்பவத்தின் போது சாமிராஜா கைலி, வேட்டி தான் அணிந்திருந்தார். சாமிராஜாவுக்கு சிலைராஜா பணஉதவி செய்வார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவத்தின் போது சிலைராஜாவுடன் வேறு யாரும் வந்தார்களா என்றால் இல்லை, உசிலம்பட்டி மருத்துவமனையில் என்னை விசாரணை செய்தது எஸ் ஐ ஆகும். புகார் நான் கொடுக்கவில்லை, புகாரை சாமிராஜின் மனைவி மற்றும் சாமிராஜ் ஆகியோர் கொடுத்தார்கள். உசிலம்பட்டி மருத்துவமனையில் தான் கொடுத்தார்களா என்றால் பதற்றத்தில் ஞாபகமில்லை. எங்கு புகார் கொடுத்தார்கள் என சரியாக ஞாபகமில்லை. சிலைராஜ் வெட்டும்போது கையில் வாட்ச் கட்டியிருந்தார் என்றால் பார்க்கவில்லை. சிலைராஜாவை முன்கூட்டியே தெரியுமா என்றால் பழக்கவழக்கமில்லை. என்னிடம் காட்டப்படும் அரிவாள் தான் எதிரி சிலைராஜா சாமிராஜை வெட்ட பயன்படுத்தியது. ( சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது) சிலைராஜா வெட்ட வரும்போது சாமிராஜா ஓடினாரா என்றால் தற்செயலாக வந்தாதால் சிறிதளவு ஓடினார். போலீஸ் விசாரணையில் சம்பவம் நடந்த போது குருவிலாம்பட்டி விலக்கின் அருகிலுள்ள பரத் டீக்கடையில் இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் போலீசாரிடமும் சொன்னேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், சம்பவம் நடக்கும் போது டீக்கடையில் இருந்து விட்டு அ.சா.1 எனது அண்ணனின் மாமனார் என்பதால்

**பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது எவ்வளவு ரத்தம் வந்தது என்றால் நிறைய ரத்தம் வந்தது..**

**மவிஇல்லை.**

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.07 17:38:32 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : | S.C. No. 10/ 2022 |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of witness of | : | P.W. 7 |
| Name | : | தங்கமலை |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.08.2025.

--------

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் குருவிலாம் பட்டியில் முறுக்கு தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். 25.04.2021ம் தேதி காலை 10 மணி முதல் 10.30 மணியில் நான்,சிலைராஜா, பிரபு, கருப்பசாமி, பார்த்திபன், பார்த்தா ஆகியோர் சமத்துவபுரத்தில் உள்ள இரு சக்கரவாகன பழுது பார்க்கும் கடையின் முன்பாக நின்று பேசி கொண்டு இருந்தோம். அப்போது எதிரி சிலைராஜா அரிவாளுடன் திடீரென அங்கு வந்து சாமிராஜாவை பார்த்து நீ இருப்பதால் தான் உன் மனைவி என்னிடம் பேசவில்லை நீ செத்து தொலைடா என்று சொல்லி அரிவாளை கொண்டு கழுத்தை நோக்கி வெட்டினார். சாமிராஜ் இடது கையால் வெட்டை தடுக்கும் போது இடது கை மணிக்கட்டில் முதல் வெட்டு பட்டது. 2 வது வெட்டும் போது தடுத்ததால் அதே இடது கை மணிக்கட்டில் பட்டது. 3 வது தடவை வெட்டும் போது சாமிராஜின் மூக்கில் வெட்டுப்பட்டது. எதிரி சிலைராஜா வெட்டி விட்டு அரிவாளை கொண்டு ஓடினார்.

நான் சாமிராஜின் மனைவி பாண்டியம்மாளுக்கு போன் மூலம் தகவல் சொன்னேன். அவரும் அங்கு உடனே வந்துவிட்டார். உடனே காயம்பட்ட சாமிராஜை அவ்வழியாக வந்த போக்கு ஆட்டோவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தோம். சிறிது நேரத்தில் காவல் உதவி ஆய்வாளர் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்தார். அப்போது சாமிராஜிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார். நானும் மேற்படி புகார்வாக்குமூலத்தில் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது தான். நான் பிறகு மேல் சிகிச்சைக்காக சாமிராஜை மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள், நாங்கள் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு வைத்தும் சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை** :

புகார்தாரர் சாமிராஜ் எனக்கு என்ன உறவு வேண்டுமென்றால் மாமனார் உறவு ஆகும். சம்பவம் நடந்தபோது நான் குருவிலாம்பட்டி விலக்கில் உள்ள டீக்கடையில் நின்று கொண்டிருந்தேனா என்றால் அங்கு இல்லை, அந்த கடையை தாண்டி நேராக உள்ள பேரையூர் ரோட்டில் இரு சக்கர வாகன பழுது பார்க்கும் கடை முன் நின்று கொண்டிருந்தேன். மேற்படி கடை அருகில் கோழிகடை , முடி திருத்தும் கடை உள்ளது. மேற்படி ஒர்க்ஷாப்பிற்கு வலது பக்கம் என்ன கடை உள்ளது என்றால் ஞாபகமில்லை. சம்பவம் நடந்தது ஒர்க்ஷாப்பிற்கும், எதிர் திசையில் நடந்தது என்றால் சரியல்ல. ஒர்க்ஷாப்பிற்கு முன்பாக தான் நடந்தது. அப்போது நேரம் காலை 10 மணியிலிருந்து 10.30 மணி இருக்கும். சிலைராஜா வரும்போது நேரம் எவ்வளவு இருக்கும் என்றால் தெரியா.து. சம்பவம் நடக்கும் போது சிலைராஜாவை பார்த்தேன். சிலைராஜா அந்த இடத்திற்கு ஆட்டோவில் வந்தாரா? , இரு சக்கர வாகனத்தில் வந்தாரா ?என்றால் நடந்து தான் வந்தார். சம்பவ இடத்திற்கும், சமத்துவ புர பேருந்து நிறுத்தத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 300 மீட்டர் இருக்கும்.

சிலைராஜா எந்த பக்கம் இருந்து வந்தார் என்றால் தெற்கிருந்து வந்தார். பின்னர் வடக்கு பார்த்து சென்றார். வடக்கு பார்த்து ரோட்டோரமாக சென்றார். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 4 கி.மீ தூரம் இருக்கும். சிலைராஜாவுக்கும்,சாமிராஜாவுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் இருந்தது தெரியுமா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. சம்பவத்தின்போது சிலைராஜா என்ன உடை அணிந்திருந்தார் என்றால் கைலி, வேட்டி அணிந்திருந்தார், என்ன சட்டை அணிந்திருநதார் என்றால் ஞாபகமில்லை. கைலி , வேட்டியின் நிறம் என்னவென்றால் பார்க்கவில்லை. போலீசார் முதலில் என்னை உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார். புகார் வாக்குமூலம் உதவி ஆய்வாளர் எழுதினார். மேற்படி புகாரில் என்ன எழுதப்பட்டிருநதது என்றால் நடந்ததது தான் எழுதப்பட்டிருந்தது. சாமிராஜிக்கு குடிபழக்கம் இருந்ததா என்றால் எப்போதாவது குடிப்பார். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாக்குமூலம் என்பது என்ன என்று எனக்கு தெரியாது.. உசிலம்பட்டி மருத்துவமனையிலிருந்து மதுரை மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக 1 மணி நேரத்தில் சென்றோம். உசிலம்பட்டி மருத்துவமனையிலிருந்து காலை 11.30 மணிக்கு மேல் புறப்பட்டோம். மதுரை மீனாட்சிமிஷன் மருத்துவமனையில் காவல் ஆய்வாளர் வந்தார், அவர் விசாரித்தார். எதிரி சிலைராஜா சம்பவத்தின் போது குடிபோதையில் இருந்தாரா என்றால் இருந்தார். வழக்கு காலகட்டத்தில் கொரோனா காலம் என்பதால் ஆட்கள் கூட முடியாது என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் அங்கு கூடவில்லை என்றால் சரியல் ல, ஒர்க்ஷாப் அருகாமையில் எனது அக்காவிற்கு சொந்தமான காடு உள்ளது, அதனால் கூடி இருந்தோம். எனது வீடு குருவிலாம்பட்டியில் உள்ளது. நானும், எனது தம்பி பிரபுவும் இரு சக்கர வாகனத்தில் காட்டிற்கு சென்றோம். ஒர்க்ஷாப் அருகாமையில் மற்ற நபர்கள் ஏற்கனவே நின்றிருந்தார்கள். நான் வீட்டிலிருந்து கிளம்பும்போது மணி

ஞாபகம் இல்லை. சிலைராஜா வெட்டி விட்டு போகும் போது அரிவாளை கொண்டு தான் சென்றார்., அரிவாள் நீளம் சரியாக தெரியாது. சிலைராஜா வலது கையால் அரிவாளை பிடித்து வெட்டினாரா ? இடது கையால் அரிவாளை பிடித்து வெட்டினாரா? என்றால் வலது கையில் அரிவாளை பிடித்து வெட்டினார். அ-சா1 எனக்கு மாமனார் என்பதால் பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாமிராஜ் சம்பவத்திற்கு முன்பு மனநிலை சரியில்லை என்றால் சரியல்ல. நல்ல நிலையில் தான் இருந்தார், லாரி ஓட்டி கொண்டு இருந்தார்.

மவிஇல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.07 17:39:07 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.